[2010 மே 6

143—

கட்டட வசதி

***73790—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஏற்கெனவே உள்ள கட்டடம் போதுமானதாகவும், நல்ல நிலையிலும் உள்ளது. எனவே, தருமபுரி வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அவசியம் தற்பொழுது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.*

திரு. இல. வேலுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தருமபுரியில் செயல்பட்டு வரக்கூடிய வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகமானது நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ளது. அங்கே மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட அளவிலான பெண்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். அங்கு போதுமான இடமில்லாத காரணத்தினால் அங்கே வரக்கூடிய பெண்கள் மாவட்ட ஆட்சியரிடம் முறையாகத் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்குண்டான வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, இந்தக் கட்டடம் 100 ஆண்டுகளுக்கு மேலான, பழமைவாய்ந்த கட்டடம் என்பதாலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே இடம் இருக்கின்ற காரணத்தினால் அங்கே புதிய கட்டடம் அமைத்துக் கொடுத்தால், இந்த அலுவலகம் மிகச் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பாக இருக்கும்.*

2010 மே 6]

ஆகவே, புதிய கட்டடம் ஒன்றைக் கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் 1914 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். தற்பொழுது, இவ்வலுவலகம் 575.20 சதுர மீட்டர் பரப்பளவில் ஓட்டுக் கூரைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டடத்திற்கு அருகில் 1974 ஆம் ஆண்டில் புதிதாக 100.90 சதுர மீட்டர் அளவில் கட்டடம் கட்டப்பட்டது. அதில்தான் இப்பொழுது வருவாய்க் கோட்ட அலுவலகம் நடந்து வருகிறது. நிருவாகத்திற்கு இடவசதி போதுமானதாக இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற, 1914-லே கட்டப்பட்ட கட்டடத்தை மராமத்து செய்வதற்காக 2008-2009, 2009-2010 ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுது நீக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்த அலுவலகம் நீதிமன்ற வளாகத்தின் மத்தியிலே அமைந்திருக்கிறது. அதைச் சுற்றி மாவட்ட அமர்வு நீதிமன்றம், மாவட்ட குற்றவியல் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் போன்ற 5, 6 நீதிமன்றங்கள் இருக்கின்றன. தினந்தோறும் சிறையிலிருக்கின்ற குற்றவாளிகளை அழைத்து வருகின்றபொழுது காவலர்களும், குற்றவாளிகளைப் பார்க்க வருகிறவர்களுமாக மிக அதிகமாக அங்கே கூட்டம் கூடுவதால், நெரிசல் ஏற்படுவதால், இந்த அலுவலகம் அங்கே அமைதியான முறையிலே செயல்படுவதற்குண்டான வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வருவாய்க் கோட்ட அலுவலர் அவர்கள் நமது தேசியக் கொடியை தினந்தோறும்

[2010 மே 6

அலுவலகத்தின் முன்னாலே ஏற்றுவார். அதற்குப் பிறகு வந்த கோட்ட அலுவலர் அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை தேசியக் கொடியை ஏற்றிக் கொண்டிருந்தார். இப்பொழுது இருக்கக்கூடிய கோட்ட அலுவலர் அவர்கள் கொடியை ஏற்றுவதே கிடையாது. ஆக, நமது தேசியக் கொடியை அலுவலகத்திற்கு முன்னால் ஏற்றுவதற்கு ஒரு பொதுவான விதிமுறை இருக்கிறதா அல்லது அவரவர்கள் விருப்பத்திற்கு ஏற்றிக்கொள்ளலாமா என்பதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தக் கட்டடத்தைப் பொறுத்த அளவில், புதிய கட்டடம் அவசியமாக வேண்டுமென்று கேட்கிறார். அது முதலிலே 1914-லே கட்டப்பட்ட கட்டடம். பின்னர், 1974 ஆம் ஆண்டு அது விரிவாக்கம் செய்யப்பட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே மிகவும், பழமையான கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காக ஒவ்வோராண்டும் புதிய கட்டடத்தை வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டுகூட பழமையான கட்டடங்களில் இருந்த அம்பாசமுத்திரம், தென்காசி, கோவில்பட்டி ஆகிய மூன்று தாலுகா அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். குறிஞ்சிப்பாடியில் ஏற்கெனவே போன ஆண்டு கட்டப்பட்டது.

முற்பகல் 9-50

இவ்வாறு பழைய கட்டடங்கள் ஒவ்வோராண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பணி தொடர்ந்து இன்னும் செய்யப்பட வேண்டிய நிலையிலே இருக்கிறது. இன்னோர் இடத்தில் கட்டப்பட வேண்டுமென்றும் இவர் கேட்கிறார். நிதி வசதிக்கேற்றாற்போல எதிர்காலத்திலே அரசு அதைப் பரிசீலிக்கும்.

தேசியக் கொடி ஏற்றுவதைப் பற்றிக் கேட்டார்கள். தேசியக் கொடி அங்கே இருக்கக்கூடிய அலுவலகங்களில் தொடர்ந்து இருப்பதாகும். தினந்தினம் வந்து ஏற்றி, இறக்குவது அல்ல. சாதாரண வட்ட அலுவலகங்களிலெல்லாம் தேசியக் கொடி

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 6]

இருக்கும். நீங்கள் தனிக் கேள்வி கேட்டால், வட்ட அலுவலகத்தில், கோட்ட அலுவலகத்தில் எப்படி அது நடைமுறையில் இருக்கிறது என்பது பற்றிய முழு விவரத்தையும் தெளிவாகத் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கமலக்கண்ணன்.

திரு. ஜெ. கமலக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் துணைக் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் ஐயா அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எங்கள் எழுச்சி நாயகன், சுய நிதிக் குழுக்களின் கதாநாயகன், அண்ணன் தளபதியார் அவர்களின் பாத மலர்களைத் தொட்டு வணங்கிக் கொண்டு, எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் நின்று என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். எனது வந்தவாசி தொகுதி வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் சுமார் 70 ஆண்டு காலமாக உள்ளது. இந்தக் கட்டடம் மோசமான நிலையில் உள்ளது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கி புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னோர் உறுப்பினர் கட்டடம் அவசியம் தேவை என்று கேட்டதற்கு ஏற்கெனவே, பதில் சொல்லியிருக்கிறேன். வருகின்ற காலங்களிலே அதற்கான நிதியாதாரத்தைப் பொறுத்து, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகம், 100 ஆண்டுகள் கடந்த பழமையான கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. மழைக் காலங்களில், அங்கே பணிபுரியும் அலுவலகப் பெருமக்களும், பொது மக்களும்

[2010 மே 6

சிரமப்படுகின்றார்கள். அதுமட்டுமல்ல, அங்கே இருக்கின்ற கோப்புகள் சரிவரப் பராமரிக்கப்படாத நிலை உள்ளது. எனவே, ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், காட்பாடி புதிய வட்டாட்சியர் அலுவலகத்தைப் போன்று புதிதாக கட்டித் தரப்படுமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முன்பு இருந்த ஆட்சிக் காலத்திலும் சரி, இன்றைக்கும் சரி, ஒரு தொலைநோக்குத் திட்டமாக, வட்டாட்சியர் அலுவலகக் கட்டட மூப்பினுடைய அடிப்படையிலே பழுதடைந்த கட்டடங்களைப் புதுப்பிப்பதும், புதிதாக உருவாக்கப்படுகின்ற வட்டங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டித் தருவதும் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரே ஆண்டிலே தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பழுதடைந்த கட்டடங்கள் எல்லாவற்றையும் எடுத்து, நாம் புதிய கட்டடங்களாக மாற்றி வழங்க இயலாது. அது அவர்களுக்கே தெரியும். நிதியாதாரத்தைப் பொறுத்துத்தான் செய்ய முடியும். இன்றைக்கு எவ்வளவு நிதிச் சுமைகள் இருந்தாலும், இந்தப் பழைய கட்டடங்களை புதிய கட்டடங்களாக உருவாக்குவதற்கும், புதிய வட்டங்களுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எதிர்காலத்திலே நிதியாதாரத்திற்கு ஏற்றாற்போல அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும். தருமபுரி தொகுதியின் உறுப்பினர் சொன்னதைப்போல தருமபுரியிலே உள்ளது 1914 ஆம் ஆண்டிலே கட்டப்பட்ட கட்டடம். இவர் சொல்லும் ஆற்காடு அலுவலகமும் எந்த நிலையிலே இருக்கிறது என்பதைப் பார்த்து, அரசு அதற்குத் தகுந்தாற்போல முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூருக்கு R.T.O. அலுவலகம் வழங்கியதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும்

2010 மே 6]

என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆத்தூரில் இயங்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. இப்போது அங்கே இருக்கக்கூடிய ரெக்கார்டுகள் எல்லாம் நனையக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. அதுபற்றி அங்கே பணியாற்றக்கூடிய வட்டாட்சியர் பல முறை என்னிடத்திலே கூறியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அங்கே ஒரு புதிய வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டித் தருவாரா என்று தங்கள்மூலம் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையிலே அலுவலகங்கள் இருப்பதாகக் கவலையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். எது மிகவும் பழுதடைந்திருக்கிறதோ, அதற்கு முன்னுரிமை கொடுத்து, வருகின்ற காலத்திலே அரசு அவற்றைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

சார் பதிவாளர் அலுவலகம்

***57564—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் கிராமத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,